பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

Nallur Branch Library

உதயன்

விலை ரூபா 5-00

சுடர்: 7 திருவள்ளுவர் ஆண்டு 2023 புரட்டாதி 21 புதன்கிழமை (07-10-1992) UTHAYAN — A Lively National Tamil Daily கதிர் 314

# இடம்பெயர்ந்த மக்களுக்கு மீண்டும் முழு அளவில் நிவாரண விநியோகம்

## பூநகரியில் திங்களன்று 2 படையினர் உயிரிழப்பு

நேற்று முன்தினம் பூநகரி இராணுவ முகாமின் முன்னணிக் காவலரண்கள் மீது விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலில் இரண்டு படையினர் உயிரிழந்தனர். கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் இவ்வாறு அறிவித்துள்ளது.

சிறிய அளவிலான சுடு படைக்கலன்களைக் கொண்டு விடுதலைப்புலிகள் இத்தாக்குதலை நடத்தியபோது ஒரு சிப்பாய் அந்த இடத்திலேயே உயிரிழந்தார்; இரண்டு சிப்பாய்கள் காயமடைந்தனர். காயமடைந்த படையினர் பலாலி இராணுவ முகாமுக்கு எடுத்துச் செல்லப்பட்டனர். அங்கு வைத்து, காயமடைந்தவர்களில் ஒருவர் உயிரிழந்தார். — இவ்வாறு கூட்டுப் படைத் தலைமை அலுவலகம் மேலும் தெரிவித்தது.

(உ-எ-10)

## பரந்தனில் குண்டுவீச்சு!

கிளிநொச்சிப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வட்டமிட்ட இரு பொம்மர்கள் திடீரென பரந்தன் பக்கமாகப் பறந்து அங்கு குண்டுவீச்சுத் தாக்குதல்களையும், றொக்கட் தாக்குதல்களையும் நடத்தின.

பரந்தன் சந்திக்கு வடக்குப் பக்கமாக அறுக்கும் மேற்பட்ட குண்டுகளை இருபொம்மர்களும் வீசின. பெரும் சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.

பொம்மர்கள் தாக்குதல் நடத்திய சமயம் கிளிநொச்சி நகரம் சிறிது நேரம் பதற்றத்துடன் காணப்பட்டது.

(ஓ-97)

## பாதுகாப்புச் செலவுக்கு 3,860 கோடி ரூபா ஒதுக்கீடு!

கொழும்பு, அக். 7

ஸ்ரீலங்கா அரசின் அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச் செலவுக்கு 3 ஆயிரத்து 860 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு பாதுகாப்புச் செலவுக்கு 3 ஆயிரத்து 450 கோடி ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது என்று கொழும்புப் பத்திரிகைச் செய்தி ஒன்று தெரிவித்தது.

1993 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தின் கீழான நிதி ஒதுக்கீட்டு விவரங்களின் சட்ட மூலத்தை பிரதமரும், நிதி அமைச்சருமான திரு. டி. பி. விஜேதுங்கா நேற்று நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

1993 ஆம் ஆண்டிற்கான செலவினம் 11 ஆயிரத்து 240 கோடி 38 லட்சத்து 13 ஆயிரம் ரூபாவாக இருக்கும் என்று சட்டமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. 4 ஆயிரத்து 640 கோடி ரூபா துண்டு விழும் தொகையாக உள்ளது.

அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடு விவரம் வருமாறு:-

★ நிதி அமைச்சு — 779 கோடி 10 லட்சத்து 898 ஆயிரம் ரூபா

★ காணி நீர்ப்பாசன,

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வேண்டியளவு ம. எண்ணை ப.நோ.கூ.ச. ஏற்றிவர அனுமதி

யாழ்ப்பாணம், அக். 7

யாழ். மாவட்டத்திலுள்ள பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் தமக்குத் தேவையான மண்ணெண்ணெயை கொழும்பிலிருந்து கப்பலில் எடுத்து வருவதற்கு கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்கியுள்ளது.

இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, கொழும்பிலிருந்து மண்ணெண்ணெய் எடுத்துவர விரும்பும் ப. நோ. கூ. சங்கங்களை உடனடியாகத் தம்முடன் தொடர்பு கொள்ளும்படி யாழ். அரச அதிபர் கேட்டுள்ளார்.

கப்பலொன்றில் சுமார் 800 பீப்பாய் மண்ணெண்ணெய் எடுத்து வர முடியும்.

ப. நோ. கூ. சங்கங்கள் கொள்வனவு செய்யும் மண்ணெண்ணெயின் அளவுக்கு ஏற்ப அவற்றை ஏற்றிவர மேலதிக கப்பல்களை ஒழுங்குபடுத்துவது குறித்து ஆராயப்படும் என செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-ம-17-162)

## மீனவரை நோக்கிச் சூடு!

நேற்றுக் காலை 7 மணியளவில் பருத்தித்துறைக் கடற் பிராந்தியத்தில் ரோந்து சென்ற கடற்படையினர், கரையோரப் பகுதியில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்களை நோக்கி சுமார் அரை மணி நேரம் பீரங்கித் தாக்குதலை நடத்தினர்; துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டது.

எனினும் மீனவர்கள் காயமின்றித் தப்பிக்கொண்டனர்.

தாக்குதல் நடைபெற்ற வேளை அப்பகுதி கரையோரங்களுக்கு மேலாக ஹெலிக்கொப்டர் ஒன்றும் சீ பிளேன் ஒன்றும் பறந்து நோட்டமிட்டுக் கொண்டிருந்தன.

(உ-15-165)

## 15 ஆம் திகதி முதல் வழங்க உத்தரவு

கொழும்பு, அக்டோபர் 7

இடம்பெயர்ந்தோருக்கான நிவாரண விநியோகத்தில் மேற்கொள்ளப்பட்ட வெட்டு நீக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் முழுஅளவில் நிவாரண விநியோகம் மேற்கொள்ளப்படும்.

'சார்க்' நாடுகளுக்கான தனது விஜயத்தை முடித்துக் கொண்டு நேற்று நாடு திரும்பியதும் ஜனாதிபதி ஆர். பிரேமதாஸா, முழு அளவில் உலர் உணவு நிவாரண விநியோகத்தை வழங்குவதற்கான உத்தரவை நிதி அமைச்சுக்குப் பிறப்பித்தார்.

இதனைத் தொடர்ந்து எதிர்வரும் 15ஆம் திகதி முதல் புனர்வாழ்வு, புனர்நிர்மாண அமைச்சு இடம்பெயர்ந்தோருக்கு முழு அளவு உலர் உணவு நிவாரணத்தை வழங்கும் என நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.

அகதி முகாம்களிலும் அதற்கு வெளியிலும் தங்கியுள்ள — இடம்பெயர்ந்தோர் அனைவருக்கும் — இந்த நிவாரணம் வழங்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டது.

நிதிப்பற்றாக்குறை காரணமாக உலர் உணவு நிவாரண விநியோகம் அரைவாசியாகக் குறைக்கப்படும் எனக் கடந்த மாதம் முதல் வாரத்தில் புனர்வாழ்வு புனர்நிர்மாணத்துறை அமைச்சு அறிவித்தது தெரிந்ததே.

### அரைவாசியாக வெட்டு

இதனையடுத்து ஐந்து பேருக்கு அதிகமான உறுப்பினர்களைக் கொண்ட குடும்பங்களுக்கு மாதாந்தம் நிவாரணமாக வழங்கப்பட்ட உலர் உணவுப்பொருள்களின் பெறுமதி ஆயிரத்து 260 ரூபாவிலிருந்து 630 ரூபாவாகக் குறைக்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிளாலியில் தாக்குதல்

யாழ்ப்பாணம், அக். 7

கிளாலிக் கடற்பிராந்தியத்தில் இருந்து நேற்றுக் காலை 9.30 மணிக்கு கடற்படையினர் பீரங்கித் தாக்குதலை மேற்கொண்டனர்.

இதனைத் தொடர்ந்து 10 மணிக்கு அப்பகுதிக்கு வந்த ஹெலிகொப்டர் ஒன்று கடற் பிராந்தியத்தில் பல தடவை வட்டமிட்டு துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டது. சேத விவரங்கள் தெரியவரவில்லை.

(உ-15)

## 'கொப்பே' மரணம் குறித்து தனிப்பட்ட விசாரணை!

இராணுவத் தளபதிகள் கொப்பேகடுவ, விஜய விமலரத்ன ஆகியோரின் மரணம் தொடர்பாக தனிப்பட்ட தனியான விசாரணை ஒன்றை அவர்களுக்கு நெருக்கமானவர்கள் ஆரம்பித்துள்ளதாகத் தெரியவருவதாகக் கொழும்பு சிங்களப் பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவ்விசாரணையை நடத்த வெளிநாட்டு நிறுவனம் ஒன்றின் உதவியை அவர்கள் பெற்றிருப்பதாகவும் அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(உ-10)

## முற்பணம் செலுத்தினால் மட்டுமே வடக்கிற்கு மேலதிக பொருள்கள்!

### அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் நிபந்தனை

யாழ்ப்பாணம், அக். 7

இடம்பெயர்ந்த மக்களுக்கு நிவாரணமாக வழங்குவதற்கான உலர் உணவுப் பொருள்களுக்கு மேலதிகமாக உணவுப் பொருள்களை அனுப்புவதானால் அவற்றுக்கு முற்பணம் செலுத்தியாக வேண்டும்.

இவ்வாறு அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் நிபந்தனை விதித்துள்ளது.

இந்த நிபந்தனையை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் ஜனாப் ரபீக் நேற்றுக் கொழும்பிலிருந்து யாழ். அரசாங்க அதிபர் திரு. கா. மாணிக்கவாசகருக்கும், திட்டமிடல் பணிப்பாளர் திரு. எஸ். பத்மநாதனுக்கும் உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை வந்து சேருமென எதிர்பார்க்கப்படும் 'குமாரி' கப்பலில் ஆயிரம் தொன் கோதுமை மா எடுத்துவரப்படுகின்றது.

மழை காலத்தைக் கருத்தில் கொண்டு மேலதிகமாக 3 ஆயிரம் தொன் மாவை அனுப்பி உதவுமாறு அரச அதிபர் நேற்று அத்தியாவசிய சேவை ஆணையாளரிடம் கேட்டார்.

அப்போதே, நிவாரணப் பொருள்களைத் தவிர்த்த ஏனைய பொருள்களை அனுப்புவதாயின் அவற்றுக்குரிய முற்பணம் (முக்கால் வாசிப் பணம்) செலுத்தப்பட வேண்டும் என்பதனை அத்தியாவசிய சேவை ஆணையாளர் தெரிவித்தார்.

இதுவரை காலமும் யாழ். மாவட்டத்துக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் கப்பல் மூலம் அனுப்பி வந்தது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

### கப்பல் போக்குவரத்துக்கும் நிபந்தனை:

## தனியார் வர்த்தகர் பொருள்களை அனுப்பினால்தான் "குமாரி" சேவை

யாழ்ப்பாணம், அக். 7

தனியார் வர்த்தகர்கள் மூவாயிரம் மெற்றிக் தொன் தடை செய்யப்படாத பொருள்களைக் கப்பல் மூலம் கொண்டுவருவதற்கு முன் வந்தால் மட்டுமே—

"குமாரி" கப்பல் கொழும்புக்கும் பருத்தித்துறைக்கும் … சேவையில் ஈடுபடும் …

யாழ். அரச அதிபர் நேற்று வானொலி மூலம் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளருடன் தொடர்பு கொண்டபோதே இந்த விவரம் தெரிவிக்கப்பட்டது.

கடந்த மாதத்துடன் 'குமாரி' கப்பல் சேவையை நிறுத்த அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் உத்தேசித்திருந்தது.

எனினும் யாழ். அரச அதிபர் கொழும்பு சென்ற சமயம் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து உத்தேச முடிவு மறுபரிசீலனை செய்யப்பட்டு கப்பல் சேவையைத் தொடர்ந்து நடத்த முடிவாகி இருந்தது.

எனினும் நேற்று அரச அதிபர் கொழும்புடன் தொடர்பு கொண்டபோது, கப்பலுக்குரிய கட்டணத்தைச் செலுத்துவதற்குத் தம்மிடம் பணம் இல்லை என்றும்—

தனியார் வர்த்தகர்கள் பொருள்களைத் தருவிக்க

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை

## பழைய மாணவர் சங்க அங்குரார்ப்பணக் கூட்டம்

யாழ்ப்பாணம் இந்து ஆரம்பப் பாடசாலை பழைய மாணவர் சங்கத்தை அங்குரார்ப்பணம் செய்வதற்கான கூட்டம் எதிர்வரும் 11 - 10 - 92 ஞாயிற்றுக்கிழமை காலை 9. 30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

★ இறை வணக்கம்
★ அதிபர் உரை
★ யாப்பு அங்கீகரித்தல்
★ உத்தியோகத்தர் தெரிவு
★ வேறு விடயங்கள்
★ பாடசாலைக் கீதம்

சகல பழைய மாணவர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

திரு. ஆ. அரவிந்தநாதன். அதிபர் — அமைப்புக் குழு

[சி-3453]


## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம், அக். 7

கோண்டாவில் வடக்கு மத்திய கிராம முன்னேற்றச் சங்கம் நடத்தும் 7 பேர் கொண்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று மாலை யாழ். தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு :-

★ கணேசா 'ஏ' அணி எதிர் யாழ் பாரதி 'ஏ' அணி.
★ சென். நீக்களஸ் 'ஏ' அணி எதிர் யுத்ராமல் 'ஏ' அணி.

(த)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், அக் 7

விடுதலைப் புலிகள் மகளிர் அமைப்பின் வெளியீட்டுப் பிரிவின் ஏற்பாட்டில் "மேஜர் பாரதியின் காதோடு சொல்லிவிடு" என்ற நூல் வெளியீடு இன்று மாலை 5-00 மணிக்கு கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் நடைபெறும்.

(த)

## உற்சவம்

வண்ணார்பண்ணை, அக். 7

வண்ணை நீராவியடி ஸ்ரீ கடையிற்சுவாமிகள் தேவஸ்தானத்தில் நாளை காலை 10 மணிக்கு அபிஷேகமும், அதனைத் தொடர்ந்து 12 மணிக்கு குருபூசையும், அன்னதானமும் நடைபெறும்.

(த-162)

## கண்காட்சி நீடிப்பு

குருநகர், அக். 7

யாழ். திருமறைக் கலாமன்றத்தின் கலைக்கச் சித்திரக் கண்காட்சி இன்று மாலை 4 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 3 ஆம் திகதி முதல் தினசரி காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணி வரை யாழ். பிரதான வீதி கலாமன்றக் கலைக் கூடத்தில் இக்கண்காட்சி நடைபெற்று வருகிறது.

(உ-51)

## உயிரிழந்த இருவரும் மண்டைதீவு வாசிகள்

தென்மராட்சி. அக். 7

கிளாலி கடலில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்ட சடலம் உறவினர்களால் அடையாளம் காணப்பட்டது. மண்டைதீவைச் சேர்ந்த தா. பெஞ்சமின் (வயது 25) என்னும் இரு குழந்தைகளின் தந்தையே மரணமானவராவார்.

இவருடன் உதவிக்குச் சென்ற மண்டைதீவைச் சேர்ந்த யோ. மிக்கேல்சாமி (வயது 45) என்பவரின் சடலமும் கடலில் இருந்து மீட்கப்பட்டது.

கடந்த சனிக்கிழமை ஆலங்கேணியிலிருந்து தேங்காய் ஏற்றிக் கொண்டு கிளாலி நோக்கி படகில் வந்தபோது கடற்படையினர் இவர்களை தமது படகில் ஏற்றிக் கொண்டு சென்றதாகவும் -

பின்னர் அவர்கள் சுடப்பட்டு கடலில் தூக்கி வீசப்பட்டிருக்கலாம் எனவும் சொல்லப்படுகிறது.

(ஓ-117)

## கிளிநொச்சிப் பகுதியிலும் மாவீரர்களுக்கு அஞ்சலி

முறிகண்டி, அக். 7

கிளிநொச்சிப் பகுதி எங்கும் நேற்று முன்தினம் திங்கட்கிழமை லெப். கேணல் சந்திரன் மற்றும் தளபதிகள் லெப். கேணல் புலேந்திரன், லெப். கேணல் குமரப்பா உட்பட பன்னிரு இயக்கிகள் ஆகியோருக்கும் —

கடந்த மாதம் ஸ்ரீலங்கா படையினருடன் ஏற்பட்ட மோதல்களின்போது வீரமரணமடைந்த கிளிநொச்சி மாவட்டத்தைச் சேர்ந்த மாவீரர்களை நினைவு கூர்ந்தும்—

நினைவஞ்சலி நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. மாவீரர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட்டு சுடர் ஏற்றப்பட்டிருந்தன. வீதிகள் அலங்கரிக்கப்பட்டு எழுச்சியுடன் காணப்பட்டன.

கிளிநொச்சி மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் நினைவஞ்சலிக் கூட்டமும் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நினைவுக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் பிரமுகர்கள் பலர் உரையாற்றினர்.

(ஓ-97)

## காந்தி இந்தியாவின் தேசபிதா இல்லை!

### பாரதீய ஜனதா கூறுகிறது

புதுடில்லி, அக். 7

மகாத்மா காந்தியை இந்தியாவின் தேசபிதா என்று அழைப்பதை நிறுத்த வேண்டும் என்று பாரதீய ஜனதாக் கட்சி விடுத்த கோரிக்கை இந்திய அரசியலில் பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாரதீய ஜனதாக் கட்சியைச் சேர்ந்த — உத்தரப் பிரதேச மாநில முதலமைச்சர் — கல்யாண்சிங் இக்கோரிக்கையை வெளியிட்டிருக்கிறார்.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் சுதந்திர இயக்கத்தைப் பற்றிப் பேசப்படும் பாடநூலில் மகாத்மா காந்திக்கு முக்கியத்துவம் வழங்கப்பட்டிருப்பதை மாநில அரசு குறைத்து இருப்பதும் தெரிந்ததே.

(உ-எ)

## சேவைக்கால கருத்தரங்கு

யாழ்ப்பாணம், அக். 7

வரலாறும், சமூகக்கல்வியும் போதிக்கும் ஆசிரியர்களுக்கும் ஆலோசகர்களுக்குமான சேவைக்காலக் கருத்தரங்கு நாளை ஆரம்பமாகவிருக்கின்றது.

யாழ். கோட்டத்துக்கான கருத்தரங்கு நாளை முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் —

வேலணைக் கோட்டத்துக்கான கருத்தரங்கு நாளை மறுதினம் முற்பகல் 9 மணிக்கு யாழ். இந்துக் கல்லூரியிலும் நடைபெறும் என யாழ் பிராந்திய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

(உ-3)

## பிரேமா திரும்பினார்

கொழும்பு, அக். 7

சார்க் நாடுகளுக்கான இரண்டாம் கட்ட விஜயத்தை முடித்துக் கொண்டு ஜனாதிபதி பிரேமதாஸா நேற்றுப் பிற்பகல் கொழும்பு திரும்பினார்.

பங்களாதேஷ் தலைநகர்

(6 ஆம் பக்கம் பார்க்க)


## BEACON STUDY CENTRE

VATHIRY, KARAVEDDY.

93 A/L

துரித மீட்டல் வினா-விடை வகுப்புகள்

| | | |
|---|---|---|
| பௌதிகவியல் | — | திரு. வர்ணம் |
| இரசாயனவியல் | — | திரு. தில்லை / திரு. சனி |
| தாவரவியல் | — | திரு. குணசீலன் |
| விலங்கியல் | — | திரு. தம்பிராஜா |
| தூய/பிரயோக கணிதம் | — | திரு. நல்லையா |

| | | |
|---|---|---|
| பொருளியல் | — | திரு. கலாகரன் |
| | — | திரு. ஸ்ரீரங்கநாதன் |
| கணக்கியல் | — | திரு. S. K. பிரபாகரன் |
| | — | திரு. நந்தகுமார் |
| அளவையியல் | — | திரு. விக்கி |
| | — | திரு. A. பிரபாகரன் |
| வர்த்தகம் | — | பிரபல ஆசிரியர்கள் |
| இந்துநாகரிகம் | — | செல்வி குமுதினி |
| தமிழ் | — | திரு. நடா |

ஆரம்பம்: 08 - 10 - 1992 (வியாழன்) 8-00 முற்பகல்

★ மேலதிக விபரங்களுக்கு அலுவலக நேரத்தில் நிர்வாகியுடன் தொடர்பு கொள்ளவும்.

[சி-3452]


## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்:
20 — 04 — 1926
ஆண்டவனடியில்:
04 — 10 — 1987
திதி:
08 — 10 — 1992

திருமதி
### அன்னமுத்து தம்பிராசா

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் மறைந்து 5 ஆண்டு சென்றதம்மா! உங்கள் உடம்பு அழிந்தொழிய நீங்கள் எங்கள் மனதில் என்றும் நிலைத்திருக்கும் அன்புத் தெய்வமே! இன்னமும் எங்கள் துயர் ஓயவில்லையே: அன்புடனும், பண்புடனும், அறிவுடனும் இல்லறம் நடத்தி இறைவனடி சேர்ந்த எங்கள் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்கு இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கணவன், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

கா. தம்பிராசா,
சுன்னாகம் தெற்கு,
சுன்னாகம்.


(5366)


A/L-93
Day Classes
மீட்டல்,-வினா-விடை

Econ. Mr E பிரபாகரன்
Acc. Mr. செனந்தி
Com. Mr. பசீல்
Rel/Log பிரபல ஆசிரியர்கள்

SHAMROCK
யாழ். சுண்டுக்குளி
(22793)


## 6ஆம் மாத நினைவஞ்சலி



செல்வன்
### தர்மலிங்கம் பிரதீஸ்கரன்

அன்னையின் மடியில்: 17 — 04 — 1972
ஆண்டவன் அடியில்: 07 — 04 — 1992

கடவுள் தரும் முத்திரையா?
கர்த்தருக்குள் நித்திரையா?

இக்கரையில் நீ இருந்து அக்கரைக்கு சென்றாயோ,
இத்தரையில் நீ உறங்க நித்திரையாய் வந்தாயோ,
அஞ்சலி நாம் செய்திடவா இந்தியாவில் பலியானாய்
ஆறுதல் நாம் பெற்றிடவா ஆண்டவரும் பலியானார்

பெற்றோரும் உற்றோரும் பதறி அழ
சுற்றோரும் மற்றோரும் கதறி அழ
விண்ணிலே விமானத்தில் பறந்து வந்தாய்
விண்ணவர் அழைத்ததும் சென்று விட்டாய்,

நித்தியத்தில் நீ இருந்து நித்தமும் துதிபாட
சத்தியத்தில் நாமிருந்து கண்ணீரில் கவிபாட
கண்ணிமைக்கும் நேரத்திலே கர்த்தரிடம் சென்றாயோ
காரிருளில் தூதனவர் காரேறி வந்தாரோ
இவ்வுலகில் நாமிருந்து இத்துயரில் நாம் வாட
விண்ணுலகில் நீ இருந்து விண்ணவரைத் துதிப்பாயோ!

திரு. திருமதி தர்மலிங்கம் (பெற்றோர்)
சகோதரர்கள்.

குருசு மதவடி,
ஆனைக்கோட்டை.

(5368)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலைப் பகுதி அகதிகளுக்கு நாச்சிக்குடாவில் வேலை வாய்ப்பு

முறிகண்டி, அக். 7

அண்மையில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளின் போது பாதிக்கப்பட்ட இளவாலை, பண்டத்தரிப்புப் பகுதிகளைச் சேர்ந்த அகதிகள் பலர், கிளிநொச்சி சென். திரேசா மகளிர் மகாவித்தியாலயத்தில் தங்கியுள்ளனர்.

167 குடும்பங்களைச்சேர்ந்த இந்த அகதிகளுக்குத் தேவையான உடனடி நிவாரண உதவிகளை கிளிநொச்சி செயலகமும், அரச சார்பற்ற நிறுவனங்களும் வழங்கி வருகின்றன.

மேற்படி அகதிகளில் ஒரு பகுதியினர் நாச்சிக்குடா பகுதிக்கு அனுப்பப்படவுள்ளனர். அவர்களுக்கு அங்கு மீன்பிடித் தொழிலை செய்வதற்கான வசதிகளும் செய்து கொடுக்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை கிளிநொச்சி செயலகம் செய்து வருகிறது.

இதேசமயம் —

உறவினர் வீடுகளில் தங்கியுள்ள மற்றைய அகதிகளுக்கு ஒரு வார உலர் உணவை தமிழ் அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் தற்போது வழங்கி வருகிறது. (ஒ-97)

## 50 மாணவருக்கு சீருடைத் துணி

யாழ்ப்பாணம், அக். 7

யாழ். மத்திய கல்லூரி வியோ கழகம், இடம்பெயர்ந்து மேற்படி கல்லூரியில் கல்வி பயிலும் 50 மாணவர்களுக்கு சீருடைத் துணிகளை வழங்கியுள்ளது. (ம)

## போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்ட கான்ஸ்டபிள்!

கொழும்பு, அக். 7

போதைப் பொருள் விற்பனையில் ஈடுபட்டு வந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தனது பதவியை இழந்துள்ளார்.

தென்னிலங்கையிலுள்ள பொலீஸ் நிலையம் ஒன்றில் கடமை புரிந்து வந்த இவர் அப்பகுதியில் ஒரு பிரபல போதைப்பொருள் வியாபாரியாகச் செயற்பட்டார் என்று தெரிவிக்கப்படுகிறது.

இது தவிர குற்றச்செயல்களிலும், ஒழுங்கீன நடவடிக்கைகளிலும் ஈடுபட்டதற்காக தென்னிலங்கையில் மேலும் 10 பொலீஸார் வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர். (ஒ-ம)

## 'யுனிசெப்' வழங்கும் பாடசாலை உபகரண உதவி 9,300 சிறார் பயன் பெறுவர்

யாழ். மாவட்டத்தில் இடம்பெயர்ந்து முகாம்களில் தங்கியுள்ள மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்களை வழங்கும் திட்டத்தின் கீழ் 9,300 சிறார்கள் பயன் பெறுவர்.

ஆண்டு ஆறுக்கு உட்பட்ட வகுப்புக்களில் கல்வி பயிலும் இச் சிறார்களுக்கு அப்பியாசக் கொப்பிகள், எழுது கருவிகள் அடங்கிய பாடசாலை உபகரணப் பொதிகள் வழங்கப்படவுள்ளன.

யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் இவற்றை கொழும்பிலிருந்து கப்பலில் எடுத்து வர நடவடிக்கை மேற் கொண்டுள்ளது. (ஒ-ம-5)

## கட்டுப்பாட்டு விலை

தென்மராட்சி, அக். 7

யாழ். மாவட்டத்தில் உற்பத்தி செய்யப்படும் கயிற்று முடிச்சிற்கு கட்டுப்பாட்டு விலை தென்மராட்சி தும்புக் கைத்தொழில் நிறுவனத்தினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (த-117)

## யாழ். மாநகர சபையின் ஆயுர்வேத வைத்தியசாலை; முழு நேரமாக இயங்கும்

யாழ்ப்பாணம், அக். 7

யாழ். மாநகர சபையால் நிர்வகிக்கப்பட்டு வரும் ஏழு ஆயுர்வேத வைத்தியசாலைகளும் இனிமேல் முழுநேரமாக இயங்கும்.

யாழ். மாநகர சுகாதாரப் பிரிவு வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன.

தற்பொழுது யாழ். நகர மத்தியிலும், நல்லூர், வண்ணார்பண்ணை, பாஷையூர், அரியாலை, கொழும்புத்துறை, நாவாந்துறை ஆகிய பகுதிகளிலும் மாநகரசபையின் இலவச ஆயுர்வேத வைத்தியசாலைகள் இயங்கி வருகின்றன.

இவற்றில் கடமை புரியும் ஆயுர்வேத வைத்தியர்கள் தற்பொழுது நிரந்தரமாக்கப்பட்டுள்ளனர்.

இவற்றுக்குத் தேவையான மூலிகைகள் யாழ். மாநகர சபையின் மூலிகைத் தோட்டத்திலிருந்து விநியோகிக்கப்பட்டு வருகின்றன. (த-ம-3)

## விளையாட்டுத் துறையில் அக்கறை காட்ட வேண்டும்

### அரியாலையில் இளங்குமரன் பேச்சு

தமிழீழத்தில் விளையாட்டுத் துறை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வரும் இந்த வேளையில், விடுதலைப் புலிகளின் அமைப்புகள் பல விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதில் அக்கறை காட்டி வருகின்றன.

இதேபோல் ஏனையோரும் விளையாட்டுத்துறைகளில் அக்கறையும், ஆர்வமும் காட்ட வேண்டும்.

விடுதலைப் புலிகள் கல்விக் குழுப் பொறுப்பாளர் திரு. வெ. இளங்குமரன் இவ்வாறு கூறினார்.

அரியாலை கிழக்குப் பிரதேசத்தில் அமைந்துள்ள ஐந்து பாலர் பாடசாலைகளுக்கு இடையிலான விளையாட்டு விழாவில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

திரு. க. சண்முகலிங்கம் தலைமையில் நடந்த விழாவில் திரு. இளங்குமரன் மேலும் சொன்னதாவது:-

விளையாட்டுகள் உடலுக்கு வலுவேற்றவும் உள்ளத்தைப் பண்படுத்தவும் பயன்படுகின்றன. எனவே தான் உடலையும் உள்ளத்தையும் பலப்படுத்தும் முகமாக விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படுகின்றன.

ஆனால் மாணவர்கள் தமது நேரத்தில் பெரும் பகுதியை 'ரியூட்டறி'களிலேயே கழிக்கின்றனர். இதனால் விளையாட்டுத்துறையில் மாணவர்கள் பங்கு பெறுவது குறைந்து வருகிறது. இந்த நிலைமை மாற வேண்டும் என்றார்.

யாழ். மாவட்ட அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி மற்றும் பலர் உரையாற்றினர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. (ஒ-3-1741)

## அரச திணைக்களங்களுக்கு கப்பலில் வரும் பொருளுக்கு கட்டணம் அறவிடப்படும்

யாழ்ப்பாணம், அக். 7

கப்பல் மூலம் அரச திணைக்களங்களுக்கு எடுத்து வரப்படும் பொருள்களுக்கு இனி கட்டணம் அறவிடப்படவிருக்கிறது.

இதுவரை காலமும் எடுத்து வரப்பட்ட பொருள்களுக்கு செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக்குழு கட்டணம் எதுவும் அறவிடவில்லை.

ஆனால் கடந்த மாதம் 'குமண' கப்பலில் எடுத்து வரப்பட்ட பொருள்களுக்கு கட்டணம் அறவிடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

## சு. க. பிரமுகரின் சகோதரருக்கு தூதுவர் பதவி!

கொழும்பு, அக். 7

சுதந்திரக்கட்சி எம். பியும் முன்னாள் சபாநாயகருமான ஸ்டான்லி திலகரத்னாவின் சகோதரரான ஒஸ்வால்ட் திலகரத்னா சிங்கப்பூருக்கான இலங்கைத் தூதராக நியமிக்கப்படவிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-எ)

## நெதர்லாந்து, ஹங்கேரியில் இலங்கைத் தூதரகங்கள் விரைவில் திறக்கப்படும்

கொழும்பு, அக். 7

நெதர்லாந்து, ஹங்கேரி ஆகியநாடுகளில் இலங்கையின் தூதரகங்கள் திறக்கப்படவுள்ளன.

யூகோஸ்லேவியா தலைநகர் பெல்கிறேட்டில் மூடப்பட்ட இலங்கைத் தூதரகத்தின் அதிகாரிகள் ஹங்கேரி தலைநகர் புடாபெஸ்டில் திறக்கப்படும் இலங்கைத் தூதரகத்துக்கு மாற்றஞ் செய்யப்படுவார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவ் வருட இறுதிக்குள் நெதர்லாந்துநாட்டிலும் இலங்கையின் தூதரகம் திறக்கப்படும். [ஒ-எ]

## பிரதேச செயலகம் மீண்டும் மருதங்கேணியில்

தாளையடி, அக். 7

வடமராட்சி கிழக்கு பிரதேச செயலகம் மீண்டும் மருதங்கேணிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

பலவேகய இராணுவ நடவடிக்கையையடுத்து இந்த அலுவலகம் தற்காலிகமாக அம்பனுக்கு முன்னர் மாற்றப்பட்டிருந்தது.

இனிமேல் வாரத்தில் ஒரு நாள் அம்பனில் நடமாடும் பணிமனை செயற்படும். (ஒ-ம-144)

## வெளிநாட்டுத் துப்பாக்கியுடன் புலிகளின் ஆதரவாளர் தஞ்சாவூரில் கைதாம்

சென்னை, அக். 7

தஞ்சாவூரில் விடுதலைப் புலிகளின் ஆதரவாளர் என்று கூறப்படும் ஒருவர் பொலீஸாரினால் கைது செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் பயங்கரத் திட்டங்களை நிறைவேற்ற இந்த நபர் தஞ்சாவூரில் நடமாடியதாகச் சந்தேகிக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அவரிடமிருந்து வெளிநாட்டுத் துப்பாக்கி 40 சுற்று ரவைகள், டெற்றனேற்றர்கள் மற்றும் சயனைட் குப்பிகளையும் பொலீஸார் கைப்பற்றினர்.

## ஆயுர்வேத சபை அங்குரார்ப்பணம்

வடமராட்சி, அக். 7

வடமராட்சியில் 'ஆயுர்வேத பாதுகாப்புச் சபை' ஒன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டுள்ளது.

உள்ளூர் மூலிகைகளைப் பாதுகாத்தல், மூலிகைகளை வளர்த்தல், ஆயுர்வேத வைத்தியர்களின் நலன்களைப் பேணல் ஆகிய பணிகளை இச்சபை மேற்கொள்ளும். (ம-165)

## புதிய சாரதி லைசென்ஸ் புத்தகம் மாத இறுதிக்குள் பெற வேண்டும்

### மோட்டார் திணைக்களம் அறிவிப்பு

கொழும்பு, அக். 7

புதிய சாரதி லைசென்ஸ் புத்தகங்களை இம்மாத இறுதிக்குள் சகல சாரதிகளும் பெற்று விட வேண்டும் என மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இப் புதிய லைசென்ஸ் புத்தகத்தைப் பெறுவதற்கு 100 ரூபா பணத்துடன் பழைய லைசென்ஸ் புத்தகம், சாரதியின் இரு கறுப்பு வெள்ளை புகைப்படப் பிரதிகள் என்பன ஒப்படைக்கப்படல் வேண்டும்.

விண்ணப்பம் சமர்ப்பிக்கப்பட்டு இரண்டு மாதத்துக்குள் புதிய லைசென்ஸ் புத்தகம் வழங்கப்படும். அதுவரை தற்காலிக லைசென்ஸ் [illegible] ஒன்று சாரதிக்கு [illegible] படும். (ஒ-ம)

## வீட்டுத் தோட்ட போட்டி

வண்ணார்பண்ணை, அக். 7

யாழ். மாநகரசபையின் எல்லைக்குட்பட்ட இடங்களில் "யுனிசெப்" நிறுவனம் சென்ற வருடம் போன்று இம்முறையும் வீட்டுத் தோட்டப் பயிர்ச் செய்கை போட்டி ஒன்றை நடத்தவுள்ளது.

இதற்கான விண்ணப்பங்கள் விரைவில் கோரப்பட இருக்கின்றன என்றும் விண்ணப்பிப்போருக்கான பயிர் விதைகள் இந் நிறுவனத்தால் இலவசமாக வழங்கப்படும் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-162)


## கிறிஸ்த சேவா ஆசிரியர் சகாய நிதிச் சங்கம்

மேற்படி சங்க அங்கத்தவர்கள் தமது கடிதத் தொடர்புகளை செல்வ அகம், ஆனைக்கோட்டை என்ற விலாசத்திற்கு வைத்துக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

ந. சிவபாதம் (புத்தொளி),
பொருளாளர்.

(22789)



## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு: 19 — 02 — 1929



உதிர்வு: 07 — 10 — 1991

திருமதி
**பரமேஸ்வரன் மகேஸ்வரி**

ஆண்டொன்று போனாலும்
ஆறாது எம் துயரம்
தீருமோ எம் சோகம்
திரும்பி வர மாட்டீரோ!

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

தாய், சகோதரர், பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

மடத்தடி ஒழுங்கை,
கோண்டாவில் மேற்கு.

[5365]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்ல கோழி எரு விற்பனைக்கு உண்டு. இல:19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். [22790]

### மாதிரி வினாத்தாள்கள்

O/L வகுப்புகளுக்கான கணிதம், விஞ்ஞானம், தமிழ், சமூகக்கல்வி, ஆங்கிலம், சமயம் [சைவம்/ றோ; க/ கிறிஸ்தவம்), வர்த்தகம் விவசாயம், மனைப் பொருளியல், சித்திரம், சங்கீதம், நடனம், ஆகிய பாடங்களுக்கான மாதிரி வினாத் தாள்கள் [விடைகளுடன்] மலிவு விலையில் விற்பனையாகின்றன. Bond Institute, 582, Stanley Road. Jaffna. (சி/3541)

### மணமகன் தேவை

யாழ்ப்பாண கத்தோலிக்க, கனடாப் பிரசையான படித்த அழகிய, 42 வயது மணப் பெண்ணுக்குப் பெற்றோர் தகுந்த மணமகனைத் தேடுகின்றனர். திருமணம் இலங்கையில். மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். [22761]

34 வயது, றோமன் கத்தோலிக்க மதப் பெண்ணுக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் வேலை பார்க்கும் மணமகன் தேவை. செ. விசயரெத்தினம், லெட்சுமி திருமண சேவை, ஆனைக்கோட்டை, மூத்தனார் கோவிலடி, நவாலி கிழக்கு, மானிப்பாய். [22782]

### மணமகள் தேவை

30 வயது பிராமின் பிரசா உரிமையுள்ள நற்குணம் பொருந்திய மணமகனுக்கு அழகிய, படித்த பெண் தேவை. நட்சத்திரம் பூரம் உதயத்தில் செவ்வாய், விவாகம் இலங்கையில். G. குணரத்தினம், 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம். [22793]

30 வயதுள்ள தனியார் கம்பனியில் காசாளராகக் கடமை செய்கின்ற மாதம் 5,000/- வருமானம் பெறும் நற்குணம் உள்ளவருக்கு அழகான, படித்த 25 வயதுக்கு உட்பட்ட பெண் தேவை. G. குணரத்தினம் இல. 169, பலாலி வீதி, யாழ்ப்பாணம். [22792]

செவ்வாய்க் குற்றமற்ற, இரகபாவங்கள் கூடிய, இந்து, பொறுப்பற்ற, அழகிய, அச்சுவினி நட்சத்திரம், 5½ அடி உயரம். மத்திய கிழக்கு நாட்டில் நிரந்தரமாக 10 வருடம் சேவையாற்றிக் கொண்டிருப்பவருக்கு 30 வயதுக்கு கீழ்ப்பட்ட படித்த, அழகிய பெண் தேவை பட்டதாரிப் பெண்களும் விண்ணப்பிக்கலாம். சீதனம் எதிர்பார்க்கப்படும்; இல:862, மே/பா, உதயன். [5363]

### ஆண்டு - 5 புலமைப் பரிசில்

அடுத்த புலமைப் பரிசில் பரீட்சைக்காக இப்பொழுது இருந்தே பயிற்சி அளிக்கும் ஆர்வமுள்ள பெற்றோர்களுக்காக மாதிரி வினாத்தாள்கள் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். வீட்டில் வைத்து விடை அளித்துத் தந்தால் இலவசமாகத் திருத்தி விடைகளுடன் கொடுக்கப்படும். Bond Institute. 582, Stanley Road, Jaffna. [சி-3540]

### ஆண்டு 6 அனுமதி

பாடசாலை அனுமதிப் பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள் 01 - 10 - 92 முதல் 16 - 10 - 92 வரை மலிவு விலையில் பெற்றுக்கொள்ளலாம். Bond Book - Stall, 582, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். [சி-3539]

### சோதிடம்

கல்வியில் சித்தியா? உத்தியோகம் கிடைக்குமா? வியாபாரம் சிறக்குமா? விவாகம் நடைபெறுமா? கேட்டுப் பாருங்களேன்! த: சிவானந்தன், பிரபல சோதிடர் ஆனந்தா சோதிட நிலையம், 384, கோவில் வீதி, நல்லூர் வடக்கு, நேரம் தினமும் காலை 8-30 முதல் 12-30 வரை, பிற்பகல் 2-30 முதல் 6-00 வரை. கவனிப்பு- கிளைகள் இல்லை. [22784]

### கல்வி

கொழும்பு றோயல் கல்லூரியில் கற்றவரால் ஆண்டு 7 முதல் சகல மாணவர்களுக்கும் தனிப்பட்ட ரீதியிலும், வீடுகளுக்குச் சென்றும் கற்பிக்கப்படும். நேரிலோ/கடித மூலமோ தொடர்பு கொள்ளவும்: டானியல் Y M.C A. உணவகம், Y.M.C.A., யாழ்ப்பாணம். [22781]

### மனைப்பொருளியல்

மனைப்பொருளியல் மாதிரிகை வினா-விடை [ஆண்டு 10—11] வெளிவந்துவிட்டது; ஆக்கம்: செல்வி யசோதா துரைசிங்கம். எல்லாப் புத்தகசாலைகளிலும் கிடைக்கும். (22760)

### நீமியா உரம்

அடிக்கட்டு உரம் கரைந்தோ, நீராவியாகவோ விரயமாகாது பாதுகாக்கிறது. நீமியா உரம் பயிர் வளர்ச்சி, விளைச்சல் பெருக்கம், பூச்சிகளிலிருந்து பாதுகாப்பு இதன் தனி சிறந்த அம்சங்கள். வட்டுக்கோட்டைச் சந்தி அப்பையா ஸ்ரோர்ஸிலும் கிடைக்கிறது. மில்க்வைற். [சி-3450]

### துரித மீட்டல் பயிற்சி

வெளிவந்துவிட்டது. பிரபல பாடசாலை ஆண்டு-6 அனுமதிப் பரீட்சைக்கும், ஆண்டு-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கும் ஏற்ற வகையில் புதிய கல்வி நிலையத்தால் புதிதாக வெளியிடப்பட்ட துரித மீட்டல் பயிற்சி (விடைகளுடன்) புதிய கல்வி நிலையத்திலும், யாழ் நகர் பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். [22794]

### அறிவுக்களஞ்சியம்

மாணவர்களுக்கு மட்டுமல்ல பொது அறிவை வளர்த்துக் கொள்ள விரும்பும் அனைவருக்கும் வேண்டியது அறிவுக்களஞ்சியம். நாலாவது இதழ் விற்பனையாகிறது. ரூபா 10. உங்கள் விற்பனையாளரிடம் கேளுங்கள். [சி-3562]

## ஆயிரம் மெற்றிக் தொன் மா கிளிநொச்சிக்கு வருகிறது

முறிகண்டி, அக். 7

கிளிநொச்சி மாவட்டத்துக்கு கடன் அடிப்படையில் ஆயிரம் மெற்றிக் தொன் கோதுமை மாவை வழங்க உணவுத் திணைக்களம் முன் வந்துள்ளது.

பருவ மழை தொடங்கிவிட்டதால், போக்குவரத்து நிலைமையில் ஏற்படும் சிரமங்கள், பாதிப்புக்கள் குறித்து கிளிநொச்சி அரச அதிபர் உணவு ஆணையாளருக்கு எடுத்துக் கூறியதை அடுத்து, அவர் மாவை கடன் அடிப்படையில் வழங்க சம்மதம் தெரிவித்திருந்தார்.

இதை அடுத்து முதற்கட்டமாக கடந்த முதலாம் திகதி 230 மெற்றிக் தொன் மா லொறிகள் மூலம் கிளிநொச்சிக்கு எடுத்து வரப்பட்டது. மிகுதியான 770 மெற்றிக் தொன் மாவும் இவ்வார இறுதிக்குள் இங்கு வந்து சேர்ந்துவிடும் என்று அரச அதிபர் திரு. கே. பொன்னம்பலம் உதயனுக்கு தெரிவித்தார்.

(ஒ-97)

## அன்பளிப்பு

அரியாலை, அக். 7

கொழும்புத்துறை இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற விஜயதசமி பூசையின் பொழுது ஆரம்பிக்கப்பட்ட குழாய்க் கிணறு அமைப்பு வேலைக்காக ஓய்வுபெற்ற ஆசிரியை திருமதி த. விசுவலிங்கம் ரூபா ஐயாயிரம் அன்பளிப்பாகக் கொடுத்தார்.

அதிபர் கா. கணேசதாசனின் முயற்சிக்கு ஆதரவாக மேலும் பலர் நன்கொடை வழங்கினர்.

(ஒ-17)

## விக்னா கல்வி நிறுவனம்

52, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

**A/L - 93** பகல் நேர வகுப்பு

(செவ்வாய், வியாழன்)

**பொருளியல்:** திரு. கலாகரன்

வினா - விடை — [8-00 a m. — 9-30 a m.]
பாடத்திட்டம் — [9-30 a m. — 11-00 a m.]

**கணக்கியல்:** திரு. S.K. பிரபாகரன்

வினா - விடை — (12-30 p.m. — 2-00 p.m.]
பாடத்திட்டம் — [11-00 a.m. — 12-30 p.m.]

**அளவையியல்:** திரு. A. பிரபாகரன்

வினா - விடை — [9-30 a.m. — 11-00 a m.)
பாடத்திட்டம் — [8-00 a.m. — 9-30 a.m.)

**வர்த்தகம்:** திரு. R. ரகுநாதன்

வினா - விடை — [11-00 a.m. — 12-30 p m.]
பாடத்திட்டம் — [12-30 p.m. — 2-00 p m.]

(சி-3557)

## யாழ்ப்பாண கிறீஸ்தவ ஒன்றியம்

Jaffna Christian Union

வருடாந்த

ஆன்மீக எழுச்சிக் கூட்டங்கள் - 1992

(ANNUAL CONVENTION)

இடம்: பரி. யோவான் கல்லூரி மண்டபம், சுண்டிக்குளி.

காலம்: ஒக்டோபர் 9, 10, 11 [வெள்ளி முதல் ஞாயிறு வரை]

நேரம்: மாலை 3-00 மணி முதல்

அனைவரையும் அன்போடு அழைக்கிறோம்

[சி-3559]

## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 25 — 04 — 1934



மறைவு: 07 — 10 — 1986

அமரர்

**நாகலிங்கம் பத்மநாதன்**

(உடற்கல்வி விரிவுரையாளர், தலவாக்கலை)

எம்மை ஆறாத்துயரில் ஆழ்த்தி, மீளாத்துயில் கொண்ட எங்கள் அன்பு அப்பாவே! ஊருக்கு உபகாரியாய் ஓங்கி நின்ற உத்தமரே! காலனவன் உம்மை இடையிலே பறித்தும் ஆறாண்டுகள் ஆகின்றன. இன்று நாங்கள் பூத்துக் குலுங்கி நிற்கையிலே எம்மை வாழ்த்தி மகிழ வீட்டுக்கொரு தலைவன் இல்லையே- நாளெல்லாம் உங்கள் பிரிவால் தவிக்கிறோம்.

மனைவி, பிள்ளைகள்.

"சேகண்டி",
வல்வெட்டி.

(சி-3451)

## பிறந்த நாளும் 43ஆம் நாள் நினைவஞ்சலியும்

அன்னையின் மடியில்: 07 — 10 — 1951



காலனின் பிடியில்: 26 — 08 — 1992

கனடாவில் சிவபதமடைந்த

அமரர்

**கனகரத்தினம் சற்குணநாதன்**

(பப்பா)

பேரிலும் சற்குணமாய்! குணத்திலும் நற்குணமாய்! எங்கள் குலம் தழைக்க வந்த மங்காச் செல்வ மகன்; தாய், தந்தைக்கு ஒரு மகனாய் தரணி வந்த நாதனவன்; எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்த ஒளி; எம்மை அன்புடனும், பாசத்துடனும் நல்வழி காட்டி; எத் துன்பங்களும் எம்மை அணுகாமல் பாதுகாத்த எங்கள் அன்புத் தெய்வமே......!! ஐந்து ஆண்டு காலமாக உன் மனைவி, மக்களைக் காணாது கண்ணயர்ந்த நீ...... உன் கண்ணிற்கு எட்ட முதல் கண் மூடி விட்டது ஏன்? கடைசி வரையிலும் உன் உடலைக் காணாது கண்ணீரால் குளிப்பாட்டி கலங்கி நிற்கின்றோம்.

நீங்கள் எங்களை விட்டுப் பிரிந்தாலும், உங்கள் அன்பு நினைவு எம்மை விட்டு அகலாது.

உமது பிரிவால் வாடும்:
அன்பு மனைவி, பிள்ளைகள், அப்பா, அக்காமார், தங்கைமார், மைத்துனர்மார், மருமக்கள்மார், மாமி, மைத்துனிமார், மற்றும் உற்றார், உறவினர்கள்.

தொட்டிலடி,
சங்கானை.

(4988)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### தமிழர் எறிந்த தொப்பி சிங்களவரிடம்!

1987ஆம் ஆண்டின் இலங்கை - இந்திய (ஜே ஆர் - ராஜீவ்) ஒப்பந்தத்தின் பிரகாரம் உருவாக்கப்பட்ட மாகாண சபை முறையை ஒழித்துவிடுவதற்கு அரசு ஈடுபாடுகாட்டி வருவதாகச் செய்திகள் வெளிவந்துள்ளன.

நாட்டில் இப்போது இயங்கும் எட்டு மாகாண சபைகளுக்குமான தேர்தல் எதிர்வரும் மார்ச் மாதத்தில் நடக்க உள்ளது அதன் பொருட்டு கோதுமை மாவின் விலை இப்போதே குறைக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல உணவுப் பொருள்களின் விலை குறைக்கப்படலாம் என்று தகவல்கள் வந்துகொண்டிருக்கின்றன.

அவ்வாறிருக்க, மாகாண சபை முறை ஒழிக்கப்படும் என்ற மேற்கண்ட செய்தி பலருக்கு குழப்பத்தைத் தருவதாக இருக்கும்.

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எனக் கூறி உருவாக்கப்பட்டதே மாகாண சபை முறை. தமிழருக்கான மாநில சுயாட்சிக்கு அது முதற்படி என்று இந்திய தரப்பில் அப்போது பெரிதாக்கிக் காட்டப்பட்டது. ஏன்? ஒப்பந்தம் கைச்சாத்தாகிய ஒரு சில நாட்களில் சென்னையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் மாகாண சபை மூலம் ஈழத்தமிழர்கள், மாநில அரசின் மூலம் தமிழகத் தமிழர்கள் அனுபவிக்கும் உரிமைகளை அனுபவிக்க முடியும் என்று ராஜீவ்காந்தி அண்டப் புளுகு அவிழ்த்து விட்டதும் உண்டு.

உண்மையில் மாகாண சபை சுதந்திரமாக, சுயமாக இயங்க முடியாதவாறு, பல அதிகாரங்களை மத்திய அரசு பிடித்து வைத்திருப்பதே உண்மை நாணயக் கயிறு மத்திய அரசிடம் இருக்கும் விதத்தில் சில்லறை அதிகாரங்கள் மட்டுமே மாகாண சபைக்கு வழங்கப்பட்டுள்ளன.

மாகாண சபை தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யாததால் அது வடக்கு-கிழக்கில் தோல்வி கண்டது தமிழ் மக்கள் அதனை நிராகரித்துவிட்டார்கள் என்பதே உண்மை.

தமிழர்கள் தூக்கி எறிந்த தொப்பியை, சிங்களவர்களின் தலையில் போடுவதற்கு ஒப்பானதே இப்போது இயங்கும் எட்டு மாகாண சபைகளும். அவை சிங்களவர்களைப் பொறுத்தவரையில், மக்களின் வரிப்பணத்தை விரயமாக்கும் வெள்ளை யானைகள் தான் அங்கேயும் அவை தனித்துச் சுயமாக இயங்க முடியாததால் ஒரே பணி இரு தடவைகள் செய்யப்படுகின்றன.

பிரேமதாசா அரசாங்கம் பதவிக்கு வந்தபின், மாகாண சபைகளின் அதிகார வரம்பை உடைத்துக் கொண்டு, ஊடறுத்துக் கொண்டு மத்திய அரசு தனது மேலாதிக்கத்தையும், அதிகாரத்தனத்தையும் நிலைநாட்டுவதில் அதிக கவனம் செலுத்துகிறது. அதற்கேற்றவகையில் நிர்வாக அமைப்புகளிலும், நிறைவேற்று விதிகளிலும் மாற்றங்கள் கொண்டு வரப்படுகின்றன.

பிரதேச செயலகங்கள் திட்டம், மாகாணசபைக்கு உள்ள சில்லறை அதிகாரங்களைக் கூட நிர்மூலமாக்கிவிடும் மறைமுக ஏற்பாடாகவே இருக்கின்றன. இப்போது அந் நடவடிக்கை வெளிப்படையாகத் தெரிய வந்துள்ளது. அவ்வளவு தான்!

மாகாண சபைகள் கலைக்கப்படுவது குறித்து தமிழர்கள் கவலைப்படமாட்டார்கள். தமிழர் தாயகத்தை ஒருசேர உள்ளடக்கிய சுயாட்சி அமைப்பு ஒன்றே அவர்களின் ஆகக்குறைந்த எதிர்பார்ப்பாகும். அது சிறிதளவு திருப்தியையாவது தரும்.

# சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத தீர்வு பிரச்சினையைத் தீர்க்க உதவாது

"சிங்கள இனவாதமும் அரசியல் யதார்த்த நிலையும்" —

என்ற தலைப்பில் ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழக அரசியல் விஞ்ஞானத்துறை

**விரிவுரையாளர் டெரன்ஸ் புரசிங்ஹா-**

4-10-1992 "லங்காதீப" சிங்கள ஞாயிறு இதழில் எழுதிய கட்டுரையின் தொகுப்பு இது.

இலங்கையின் இனப்பிரச்சினை பற்றிப் பல்வேறு கருத்துக்களும் சிந்தனைகளும் வெளியிடப்பட்டுள்ளன. சிலர் இலங்கையில் இனப்பிரச்சினை இல்லை எனச் சொல்கிறார்கள், வேறு சில சிந்தனையாளர்கள், இலங்கையில் தமிழர்கள் என்ற ஒரு இனம் இல்லை எனக் கூறி இருக்கிறார்கள். ஆங்கில ஏகாதிபத்தியவாதிகள்தான் தமிழர் என்றொரு இனத்தைப் பிரித்து எடுத்ததாக அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். அதுபோல தமிழ் இனத்துக்கு இந்நாட்டின் வரலாற்றில் வதிவிட உரிமை இல்லை என்றும் அவர்கள் கூறியுள்ளனர்.

ஏகாதிபத்தியவாதிகள் எல்லோரும் சிறுபான்மையினருக்குக் கூடிய சலுகைகளை வழங்கியதன் மூலம் இனங்களுக்கிடையே தனித்தனி தேசிய அடையாளத்தை ஏற்படுத்த முனைந்தனர். அந்நியர் ஆட்சியின் கீழ் இந்த நாட்டிலும், அரசினர் குறிப்பாக தமிழ், முஸ்லிம் சமூகங்களுக்கு ஆதரவு காட்டினார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிந்தது.

சுதந்திரம் கிடைத்த ஆரம்ப காலத்திலும் அரச சேவையில் சிறுபான்மையினருக்கே சந்தர்ப்பங்கள் கிடைத்தன. இதற்குக் காரணம் அந்நியர் ஆட்சியின் கீழ் இருந்த ஆட்சிமுறைச் செல்வாக்கு காரணமாக, சிறுபான்மை இன மக்களுக்கே ஆங்கில மொழியறிவு கூடுதலாக இருந்ததே.

#### சிங்கள எழுச்சி

1956ஆம் ஆண்டு சிங்கள இன எழுச்சி பற்றிய எண்ணம் எழுந்ததற்கும் இதுவே பிரதான காரணமாகும். அந்த எழுச்சியின் காரணமாகச் சிங்கள மொழி அரச கரும மொழியாக்கப்பட்டதுடன் சிங்கள கிராம, விவசாய, சிறுதனவந்த மக்களுக்கு பல அனுகூலங்கள் உண்டாகின என்றாலும் இந்த நடவடிக்கையால் ஏற்பட்ட பிழை மிகப் பாரதூரமானதாயிற்று.

இம் மொழிப் பிரச்சினை இந்நாட்டில் சிங்கள தமிழ் விரோதத்துக்கு பிரதான சந்தியாக அமைந்தது. சிங்கள மொழி அரச கரும மொழி ஆனதால் தமிழ் அரச ஊழியர்களின் தொழில் பாதிக்கப்பட்டது அதிலிருந்து தொடங்கித் தொடர்ந்து சந்தர்ப்பவாத அரசியல் வாதிகளால் இனவாத அரசியல் வியாபாரம் ஆக்கப்பட்டதால் காலப் போக்கில் இந்நாட்டில் இனப்பிரச்சினை வலுப்பெற்றது.

1948 — 49 காலப்பகுதியில் ஐக்கிய தேசியக் கட்சி அரசி-

## தமிழரின் தேசிய அடையாளத்தை நிராகரிக்க சிங்களவருக்கு உரிமையில்லை

-னால் பிரசாவுரிமைச் சட்டம் கொண்டுவரப்பட்டதால் தோட்டப் பகுதிகளில் வாழ்ந்த லட்சக் கணக்கான இந்தியத் தமிழ் தொழிலாளர்கள் குடியுரிமையை இழந்தது இந்த நாட்டில் இனப்பிரச்சினை உருவாகுவதைத் தீர்மானிக்கும் காரணியான சம்பவமாகும்.

தோட்டத் தொழிலாளர்களின் குடியுரிமை பறிக்கப்பட்டதை முன்வைத்து தமிழ்க் காங்கிரஸ் கட்சியிலிருந்து பிரிந்த திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம்; சமஷ்டிக் கட்சியை ஆரம்பித்தார், எனினும், அக்கட்சி பிரதானமாக வடக்கு-கிழக்கி-

#### சிங்களக் கல்விமான் கருத்து

-லுள்ள இலங்கைத் தமிழர்களின் தேவைகளுக்காகவே போராடியது.

#### சமஷ்டி அரசியல்

வடக்கு-கிழக்கு மாகாணங்களுக்கு சமஷ்டி அரசியல் நிர்வாகத்தை ஏற்படுத்துவதே அக்கட்சியின் மூலாதாரக் கொள்கையாக இருந்தது.

சமஷ்டிக் கோரிக்கைக்கு மாற்றீடாகவே 1958 இல் பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் உருவாக்கப்பட்டது; ஆனால் இவ்வொப்பந்தம் சிங்கள இனவாதிகளின் எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டது.

அந்தச் சிங்கள இனவாதத்துக்கு அன்று ஐக்கிய தேசியக் கட்சியே தலைமை வகித்தது! சமஷ்டிக் கோரிக்கைக்கு மாற்றாக 1966 இல் டட்லி சேனநாயக்காவின் அரசினால் முன்வைக்கப்பட்ட மாவட்ட சபை சட்ட மூலமும் சிங்கள இனவாதிகள் காட்டிய எதிர்ப்பின் காரணமாக கைவிடப்பட்டது; இச்சந்தர்ப்பத்தில் அந்த எதிர்ப்புக்குத் தலைமைத்துவம் வகித்தது ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாகும்.

#### 1972இல் உக்கிரமானது

1972 அரசியலமைப்புச் சட்டத்தின் மூலம் சிங்களம் அரச கரும மொழியாகவும், பௌத்தமதம் அரச மதமாகவும் ஆக்கப்பட்டதாவது தமிழர் இனப் பிரச்சினை மிகவும் உக்கிரமடையக் காரணமானது.

தமிழர்களின் அரசியல் அமைப்புக்கள் மூலம் 1970 ஆம் ஆண்டு வரை முன்வைக்கப்பட்ட சமஷ்டிக் கோரிக்கை நிறைவேற்றப்படாத காரணத்தால் 1970 ஆம் ஆண்டின் பின் அந்தத் தசாப்தத்தின் பிற்பகுதியில் அவர்கள் தனி அரசுக் கோரிக்கையை முன் எடுத்துச் செல்லலாயினர்.

சிங்கள இனவாத அமைப்புகள் என்ன கருத்தைக் கூறினாலும், தற்போதைய அரசியலில் யதார்த்தமாக உள்ளது தமிழர்களின் இனப் பிரச்சினையே

#### நிராகரிக்க உரிமையில்லை

தமிழர்களுக்குத் தேசிய அடையாளம் இருப்பதாகத் தமிழ் மக்கள் தெரிவித்தால் அதை நிராகரிப்பதற்குப் பெரும்பான்மை இனத்துக்கு எந்த உரிமையும் இல்லை. அது போலவே எந்த ஒரு இனமும் தனது வெற்றிக்காகப் போராடுமேயானால் அது அந்தத் தேசிய இனத்தின் உரிமை.

எந்த இனத்துக்கும் தனது எதிர்காலத்தையிட்டு முடிவு செய்ய உரிமை உண்டு. அந்த உரிமை மீது நெருக்கடி கொடுக்க வேறு எந்த இனத்துக்கும் உரிமை இல்லை. வேண்டுமானால் பேச்சுவார்த்தை நடத்தலாம். இதனை யதார்த்த பூர்வமாக உணர்ந்து கொள்வது நல்லது.

இப்போதைய யுத்தம் நிறுத்தப்பட வேண்டுமானால் தீர்க்கமானதும், தெளிவானதுமான அரசியல் தீர்வு ஒன்று தேவை.

#### தீர்வுக்குத் தடங்கல்கள்

அந்தத் தீர்வு எப்படி அமைய வேண்டும் என்பதே இப்போதுள்ள கேள்வி. எப்படியிருந்தாலும் இந்தத் தீர்வு பற்றிப் பல தடங்கல்கள் உள்ளன. முக்கியமாக, சிங்கள, தமிழ் சமூகங்களுக்கிடையே நிலவும் பரஸ்பர நம்பிக்கையீனம் தேசிய பிரச்சினைக்கு தீர்வு ஏற்படுவதற்கு பிரதான தடையாக இருக்கிறது.

வடக்கிலும், தெற்கிலும் உள்ள முதலாளித்துவ, சிறு முதலாளித்துவ அரசியல் கட்சிகளிலுள்ள சந்தர்ப்பவாத அரசியல்வாதிகள் இந்நாட்டின் தேசிய பிரச்சினைக்கு தீர்வு ஏற்படப் பெரும் தடையாக உள்ளனர்.

வடக்கில் அரசியல்கட்சிகள் தமிழர்களின் வாக்குத் தளத்தை வென்றெடுக்க இனவாத அரசியல் நடத்துகின்றன.

கடந்த தசாப்தங்களில் தெற்கில் சிறு முதலாளித்துவ, கிராம விவசாயிகளின் செயற்பாடுகளால் எழுந்த இளைஞர் மற்றும் மாணவர்களின் கிளர்ச்சி அரசினால் நசுக்கப்பட்டபோது அது பற்றி எதிர்ப்புத் தெரிவித்த தெற்கு அரசியல் கட்சிகள், வடக்கில் இளைஞர்கள் அரசினால் நசுக்கப்பட்டபோது அதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை.

அவ்வாறு செயற்படுவதற்கு, அக்கட்சிகள் சிங்கள வாக்குத் தளத்தைப் பாதுகாக்க வேண்டி இருப்பதே காரணமாகும்.

தெற்கில் சிங்கள இளைஞர்கள் ஏன் போராடினார்களோ, அதுபோலவே வடக்கிலும் இளைஞர்கள் போராடுகின்றனர். வடக்கில் விடுதலைப் புலிகள் யுத்தத்தின் மூலம் வெற்றியடைய முனைந்துள்ளார்கள். அதாவது ஆயுதப் போராட்டத்தின் மூலம் ஈழ அரசை வென்றெடுக்கப் போராடுகிறார்கள்.

எப்படியிருப்பினும், தமிழர்களின் சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்காத எந்தத் தீர்வும் இனப்பிரச்சினை தீர உதவமாட்டாது.

★

#### தென்மராட்சிப் பகுதியில்

# அகதிகளுக்கு குடிசைகள் அமைக்கும் வேலை ஆரம்பம்

யாழ்ப்பாணம், அக். 7

வலி - வடக்கு, வலி-மேற்கு பகுதிகளில் இருந்து இடம்பெயர்ந்த மக்களை குடியமர்த்துவதற்கென 2ஆயிரத்து 300 குடிசைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக யாழ். செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

அரச சார்பற்ற நிறுவனங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம், இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளை என்பன இக்குடிசைகளை அமைத்துக் கொடுப்பதற்கு முன் வந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

தென்மராட்சிப் பகுதிகளிலேயே மேற்படி அகதிகளுக்கு குடிசைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் அதற்கான முதற் கட்ட வேலைகள் ஆரம்பமாகிவிட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது.

மாரி காலம் ஆரம்பமாகிவிட்டதால், அகதிகள் தங்குவதற்கு குடிசைகள் அவசரமாக அமைக்கப்பட வேண்டியது அவசியம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (ஓ-17)

# பணமாக மட்டுமே மீட்பு நிதி பெறப்படும்

யாழ்ப்பாணம், அக். 7

இம்மாதம் 14 ஆம் திகதி முதல் அனைத்து உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளிலும் நேரடியாக மீட்பு நிதி பெறுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருப்பதாக தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப் பொறுப்பாளர் திரு. செ. தமிழேந்தி தெரிவித்தார்.

மீட்பு நிதியாக 10 ஆயிரம் [illegible] பவுண் நகைகளோ, காசோலைகளோ பெற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் அவர் தெரிவித்திருக்கிறார். (உ)

## காலமானார்

கொழும்பு. அக். 7

முன்னாள் பிரதம நீதியரசர் எச். டி. தம்பையா காலமானார் என்று அறிவிக்கப்படுகிறது. (உ-எ)

### வலைப்பந்தாட்டம் கயிறு இழுத்தல் போட்டிகள்

யாழ்ப்பாணம், அக். 7

மேஜர் முரளி ஞாபகார்த்த விளையாட்டுப் போட்டித் தொடரில் வலைப் பந்தாட்டம், கயிறு இழுத்தல் போட்டிகள் வேம்படி மகளிர் கல்லூரியில் இன்று (புதன்கிழமை) காலை 9.00 மணிக்கு நடைபெறவிருக்கின்றன.

காலை 9.00 மணிக்கு நடைபெறும் வலைப்பந்தாட்டப் போட்டிகளில் வல்வை மகளிர் கல்லூரியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரியும் —

உடுவில் மகளிர் கல்லூரியை எதிர்த்து யாழ். கன்னியர் மடம் மகாவித்தியாலயமும் மோதவிருக்கின்றன.

காலை 9.30 மணிக்கு நடைபெறும் கயிறு இழுத்தல் (பெண்கள்) போட்டியில் மல்லாகம் மகா வித்தியாலயத்தை எதிர்த்து ஞானசாரியார் கல்லூரியும் —

பனை கொத்தியை எதிர்த்து மகாஜனாக் கல்லூரியும் —

(6 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வலைப்பந்தாட்டம்...

[5 ஆம் பக்கத்தொடர்ச்சி]

வயாவிளான் மகாவித்தியாலயத்தை எதிர்த்து வேலணை சொத்தணியும் மோதவிருக்கின்றன. இந்தப்போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் வல்லை மகளிர் கல்லூரி மோதும். [உ-8]

## பாதுகாப்புச்...

[1 ஆம் பக்கம் தொடர்ச்சி]

மகாவலி அபிவிருத்தி அமைச்சு — 521 கோடி 88 லட்சத்து 36 ஆயிரம் ரூபா

கல்வி, உயர்கல்வி அமைச்சு —293 கோடி 88 லட்சம் ரூபா

சுகாதார மகளிர் விவகார அமைச்சு — 511 கோடி 267 லட்சத்து 73 ஆயிரம் ரூபா

★ உணவு, கூட்டுறவுத் துறை அமைச்சு — 460 கோடி 75 லட்சத்து 27 ஆயிரம் ரூபா

ஜனசக்தி அமைச்சு — 459 கோடி 66 லட்சத்து 58 ஆயிரம் ரூபா

வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சு — 425 கோடி 39 லட்சத்து 45 ஆயிரம் ரூபா. [உ-எ]

## செஞ்சிலுவை கொடி வாரம்

யாழ்ப்பாணம், ஆக. 7

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் கொடிவாரம் இன்று முதல் எதிர் வரும் 15 ஆம் திகதி வரை நடைபெறும். [த-30]

## வவுச்சர் வந்தும் கொடுப்பனவு இல்லை

யாழ்ப்பாணம், ஆக. 7

அக்டோபர் மாதத்துக்குரிய ஒய்வூதிய வவுச்சர்கள் யாழ். செயலகத்துக்கு வந்து சேர்ந்துள்ளபோதும் நிதி நெருக்கடியால் ஒய்வூதிய கொடுப்பனவு வழங்க முடியாதுள்ளதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எதிர்வரும் 22, 23 ஆம் திகதியளவில் கொடுப்பனவு வழங்கக்கூடியதாக நிதி நிலை சீரடையும் என எதிர்பார்க்கப்படுவதாக அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார்.

## தண்டவாளத்தில் குண்டு வெடிப்பு

சென்னை, ஆக. 7

பெங்களூர்-தர்மபுரி மீற்றர் கேஜ் தண்டவாளத்தில் கடந்த ஞாயிறு இரவு சக்தி வாய்ந்த குண்டு ஒன்று வெடித்ததில் தண்டவாளம் சுமார் 150 அடி தூரத்துக்கு [வீசி] யெறியப்பட்டது.

தர்மபுரி மாவட்டம் - முத்துப்பாணம்பட்டி என்னும் இடத்தில் அச்சம்பவம் இடம் பெற்றது. இந்தக் குண்டு வெடிப்புக் காரணமாக அப்பகுதி ரயில் சேவை சீர்குலைந்தது. [உ-எ]

## இடம் பெயர்ந்த...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கப்பட்டது.

இராணுவ நடவடிக்கைகளினால் அதிகம் பாதிக்கப்பட்டு பெரும் எண்ணிக்கையான மக்கள் வடக்கு, கிழக்கில் இடம் பெயர்ந்திருக்கும் வேளையில், நிவாரணத்தை வெட்டும் அரசின் முடிவு வடக்கு, கிழக்குத் தமிழர்களுக்கு எதிரான ஒரு முடிவு எனக் கருதப்பட்டது.

அரசின் முடிவுக்கு எதிராக வடக்கு — கிழக்கில் பெரும் வெகுஜனப் போராட்டங்கள் நடத்தப்பட்டன; பேரணி நடத்தி எதிர்ப்புத் தெரிவித்த மக்கள் ஜனாதிபதி பிரேமதாஸாவுக்கும், வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும் பல்வேறு மகஜர்களை அனுப்பியிருந்தனர்.

நிவாரணத்தை வெட்டும் அறிவிப்பு இந்தியாவிலிருந்து ஈழத் தமிழ் அகதிகள் தாயகம் திரும்பும் நடவடிக்கையைப் பாதிப்பதாக இந்தியத் தரப்பில் அதிருப்தி தெரிவிக்கப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. [உ-த-3]

## முற்பணம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

அந்தப் பொருள்களுக்கான பணத்தை திறைசேரி அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்துக்கு வழங்கி வந்தது.

அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் அனுப்பும் பொருள்களை விற்பதன் மூலம் பெறும் பணத்தை, ஒய்வூதியம், சம்பளம் மற்றும் செயலக செலவினங்களுக்கு பாவிக்க திறைசேரி யாழ். செயலகத்துக்கு அனுமதி வழங்கியிருந்தது.

தற்சமயம் திறைசேரியில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடியால் அத்தியாவசிய சேவைகள் திணைக்களத்துக்கு நிதி வழங்க மறுப்புத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதையடுத்தே யாழ்ப்பாணத்துக்கு மேலதிக பொருள்கள் அனுப்ப முற்பணம் தருமாறு அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் கேட்டுள்ளது. [அ-ம-3]

## பிரேமா...

[2 ஆம் பக்கத் தொடர்ச்சி]

டாக்காவில் இருந்து புறப்பட்ட திரு. பிரேமதாஸா சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் ஒரு மணித்தியாலயம் வரை தரித்து நின்றார். அங்கு அவரை மாநில அரசு அதிகாரிகள் சந்தித்து வரவேற்றனர்.

கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையம் வந்தடைந்த ஜனாதிபதியை பிரதமர் டி. பி. விஜேதுங்காவும் ஏனைய அமைச்சர்களும் வரவேற்றனர். [உ-எ]

## தனியார்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

முன் வந்தால் மட்டுமே ''குமாரியை'' தொடர்ந்து சேவையில் ஈடுபடுத்த முடியும் எனவும்— தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து—

கொழும்பிலிருந்து உணவு மற்றும் மருந்துப் பொருள்களைத் தருவிக்க விரும்பும் வர்த்தகர்களைத் தம்முடன் தொடர்பு கொள்ளுமாறு அரசாங்க அதிபர் [illegible] [உ-3-ம-162-17]

## யாழ். - கொழும்பு

# ஹெலி சேவை நடத்துவதற்கு படையினர் அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம், ஆக. 7

அவசர நோயாளர்களை கொழும்புக்கு அழைத்துச் செல்வதற்கு வசதியாக யாழ். — கொழும்பு ஹெலி சேவை நடத்த எடுக்கப்பட்ட முயற்சிகள் கூட்டுப்படைத் தலைமையகம் அனுமதி வழங்க மறுத்ததை அடுத்து கைவிடப்பட்டது.

இது தொடர்பாக கொழும்பில் நடத்திய பேச்சுக்கள் பலனளிக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்திய சாலையில் தற்சமயம் உயிருக்காகப் போராடிக்கொண்டிருக்கும் இளம் பெண் டாக்டர் ஒருவரை ஹெலி மூலம் கொழும்புக்கு அழைத்து வரவும் அனுமதி வழங்கமுடியாது என்று கூட்டுப்படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் வெள்ளிக்கிழமை பருத்தித்துறைக்கு வந்து சேரும் ''குமாரி'' கப்பல் மூலம் இந்த நோயாளி பலாலிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கிருந்து விமானம் மூலம் கொழும்புக்கு கூட்டிச் செல்ல தற்போது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

### செஞ்சிலுவையினர் கருத்து

இதேவேளை—

கொழும்பு — யாழ்ப்பாண ஹெலி சேவை நடத்த தங்கள் மூலம் முயற்சி எடுக்கப்படவில்லை என்றும்—

யாழ். வைத்திய வட்டாரங்களே இந்த முயற்சியில் ஈடுபட்டனர் என்றும்—

ஹெலி சேவை நடத்த பெருந் தொகையான நிதி தேவை என்றும்—

தற்போது தமது அமைப்புக்குள்ள நிதி நெருக்கடியில் தம்மால் இந்த சேவையை மேற்கொள்ள முடியாது என்றும்—

செஞ்சிலுவைச் சங்க சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி தெரிவித்தார். [உ-3]

# தேசிய அடையாள அட்டை; பிரதேச செயலகம் வழங்கும்

கொழும்பு, ஆக. 7

தேசிய அடையாள அட்டையை விநியோகிக்கும் நடவடிக்கை பிரதேச செயலக மட்டத்துக்குப் பன்முகப்படுத்தப்பட்டுள்ளது.

சகல பிரதேச செயலகங்களுக்கும் இது தொடர்பாக ஏற்கனவே பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்பது மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலகங்களுக்கும் இந்த நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது. ஏனைய மாவட்டங்களிலுள்ள பிரதேச செயலகங்களுக்கும் இந்த நடைமுறை படிப்படியாக அமுலுக்கு வரும் என்று ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் திரு. பந்துல குலதுங்கா தெரிவித்தார். [ஒ-எ]

# வடமராட்சிப் பகுதிகளில் வயிற்றோட்டம் பரவுகிறது

தாளையடி, ஆக. 7

வடமராட்சியில் வல்வெட்டித்துறை, தொண்டமனாறு, கொற்றாவத்தை பகுதிகளில் வயிற்றோட்ட நோய் பரவி வருகிறது.

வல்வெட்டித்துறை இந்திராணி வைத்தியசாலையில் மட்டும் வயிற்றோட்ட நோயினால் பாதிக்கப்பட்ட 25க்கும் அதிகமானோருக்கு சிகிச்சை வழங்கப்பட்டுள்ளது. இவ் வைத்தியசாலையில் வயிற்றோட்ட நோயினால் பீடிக்கப்பட்டுள்ளவர்களுக்கு சிகிச்சை வழங்கவென தனியான விடுதி ஒன்றும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இதே வேளை இங்கு வயிற்றோட்ட நோய்க்கு சிறுமி ஒருவர் பலியாகியுள்ளார். (ஒ-ம-144)

## தமிழ் மொழி மூலம்

# யாழ். பல்கலையில் மட்டுமே நாடக பட்டப்படிப்பு!

## நூல் அறிமுக விழாவில் சிவத்தம்பி

கொக்குவில், ஆக. 7

தமிழ் மொழி மூலம் நாடகத்தை பட்டப்படிப்புக்காக மேற் கொள்ளும் நடைமுறை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தில் மட்டுமே உண்டு அத்தகைய வசதி தமிழகப் பல்கலைக்கழகங்களில் கூட இல்லை.

இவ்வாறு பேராசிரியர் கா. சிவத்தம்பி தெரிவித்தார்.

யாழ். பல்கலைக்கழக நூதனசாலை மண்டபத்தில் அண்மையில் இடம் பெற்ற மட்டக்களப்பு பல்கலைக்கழக நுண்கலைத் துறைத் தலைவர் கலாநிதி சி. மௌன குருவின் 'பழையதும் புதியதும்' நூல் அறிமுக விழாவில் தலைமையுரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்ட தகவலைக் கூறினார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில்—]

சிங்கள நாடகத்துறை சிறப்பான வளர்ச்சியடைந்துள்ள போதிலும், யாழ். பல்கலைக்கழகத்தைப் போன்று அப்பகுதிகளில் நாடகமும் அரங்கியலும் பல்கலைக்கழகங்களில் ஒருவரையறையான கல்விமுறையாக வளர்த்தெடுக்கப்படவில்லை.

கலாநிதி மௌன குரு யாழ். பல்கலைக்கழகத்தை விட்டுச் சென்றது நாடகத்துறைக்கும் நுண்கலைத்துறைக்கும் பெரும் இழப்பாகும். எனினும் அவர் கிழக்கிலங்கையில் இவற்றை வளர்த்தெடுப்பதற்காக மட்டக்களப்பு பல்கலைக்கழக நுண்கலைத்துறைத் தலைவராக பொறுப்பேற்றுச் சென்றுள்ளார் அந்தவகையில் இது அற்புதமான ஆனந்தமும் துயரமும் நிறைந்த சம்பவமாகும்—என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், பத்திரிகையாளர் ஏ. ஜே. கனகரத்தினா, திரு. க. சிதம்பரநாதன், கலாநிதி சோ. கிருஷ்ணராஜா ஆகியோரும் அங்கு உரையாற்றினர். (ஒ-ம-69)

பெய்யும் மழை நீர் பெயராதிருந்தால்
செய்யும் தொழிலும் சிறப்படையும்


# மரண அறிவித்தல்கள்

## K. L. வில்லியம்

திரு. K. L. வில்லியம் (யாழ். நியூ சிற்றி பேக்கரி உரிமையாளர்) காலமானார். இவர் றூபியின் அன்புக் கணவரும், றூபன், அனுறன், நிமல், ஜயந்தி, ரகு, ரவி, சுஜீவா, மாலினி ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பிரான்சிஸ், முத்து ஆகியோரின் அன்பு மருமகனும், செபநேசன், றாஜினி, யூலி ஆகியோரின் அன்பு மாமனாரும், தேவதாஸ், அமலன், குணசீலி ஆகியோரின் அன்பு மைத்துனரும், பேள், றொஷான், அருண், யுடின், ஆலின் ஆகியோரின் அன்புப் பேரனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (07-10-92) புதன் கிழமை பி. ப. 3-30 மணிக்கு இறுதிக் கிரியைக்காக பரிசுத்த கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல: 5, புதிய வீடமைப்புத் திட்டம்,
குருநகர், யாழ்ப்பாணம். (22791)

## திருமதி தங்கம்மா அருணாசலம்

புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும், 10, இந்து மகளிர் ஒருங்கை கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கம்மா அருணாசலம் 4-10-92 இல் இந்தியாவில் காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு, திருமதி, வைத்திலிங்கம்-பத்திவிப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்ற திரு.ச. அருணாசலம் (Retd P. W. D Head overseer, Rawang, Malaysia) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திருமதி நல்லமுத்து (ஆசிரியை), திரு. பொன்னையா (Registrar) திருமதி சின்னம்மா (ஆசிரியை), திரு. சபாபதிப்பிள்ளை, திரு. செல்லையா (வைத்திய கலாநிதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், திருமதி ந. கிருஷ்ணகுமாரி (இந்தியா), திரு. பாலகிருஷ்ணன் (மலேஷியா), திருமதி சு. சாந்தகுமாரி (மலேஷியா), திரு. ராதாகிருஷ்ணன் (கனடா) ஆகியோரின் அருமைத்தாயாரும் —

காலஞ்சென்ற திரு. பொ. நா. நடராஜா (பிரசித்த நொத்தாரிசு), திருமதி வா. மல்லிகைபுஷ்பம் (மலேஷியா), திரு. சி. சுப்பிரமணியம் (வைத்திய கலாநிதி-பேராசிரியர், மலேஷியப் பல்கலைக்கழகம்), திருமதி ரா. தவயோகம் (கனடா) ஆகியோரின் அன்பு மாமியாரும்—

வரகுணன் (சுவிஸ்), குணநிதி (U. K), கிருபானந்தன் (இந்தியா), தேவானந்தன் (சுவிஸ்), குகானந்தன் (பிரான்ஸ்), ஒப்பிலானந்தன் (பொறியியலாளர்-இந்தியா), கேதாரன், அருணன் (மலேஷியா), புஷ்பம் (மலேஷியா), இராமகிருஷ்ணன் (மலேஷியா), குஞ்சு (மலேஷியா), கணேஷன் (இந்தியா), திருமதி ஜெ. பாலாம்பிகை (U. K), சுதாசினி (மலேஷியா), கோபிகிருஷ்ணா (கனடா), சகிஷ்னா (கனடா), திரு இ. ஜெகதீஸ்வரன் (வைத்திய கலாநிதி - U. K), திருமதி ஜெ. சுபத்திரா (U. K) ஆகியோரின் அன்புப் பேர்த்தியாரும் பிரியங்காவின் (U. K) அருமைப் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிச் சடங்கு இந்தியாவில் (சென்னை) உள்ள இல்லத்தில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ந. கேதாரன்
(பேரன்)

திருமதி கி நடராஜா,
28 Rajaji Str,
Radhanagar,
Chromepet,
Madras-44,
S. INDIA. (22801)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 393/3, இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 07-10-92 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org